
# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 3 | திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 27 | வீச்சு 12

12—11—49 சனிக்கிழமை


ஆசிரியர்கள்:






(10-ம் பக்கம் பார்க்க)

# பயங்கர பலிபீடம்!

— 3 —

அருந்தியவுடனே போதை தரும் பொருள் மது என்கிறார்கள். நினைத்த அளவிலேயே வெறி ஊட்டக் கூடிய 'வஸ்து' காமம் என்கிறார்கள். ஆனால் இந்த இரண்டையும் விட வேகமாகவும், அதிகமான அளவிலும், எளிதில் மீளமுடியாத வகையிலும் போதை தரக்கூடிய பொருள் வேறொன்றிருக்கிறது—அது, அவ்வளவு போதை நிறைந்தது என்பது பலருக்குத் தெரியாது; தெரிவித்தாலும் பலர் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் — ஆனால் உண்மையில், நாம் குறிப்பிடும் அந்தப் பொருளால் விளையும் போதை, மது—காமம்—இந்த இரண்டினாலும் விளையும் போதைகளின் கூட்டுத் தொகையை விட அதிகமானது! அதிகமானது மட்டுமல்ல, ஆபத்து மிகுந்ததுங்கூட! நாம் குறிப்பிடும் அந்தப் போதைமிகு பொருளின் பெயர், ஆச்சரியப் படாதீர்கள், "**வெற்றிக் களிப்பு**"!

எப்படியோ, எந்தக் காரணத்தாலேயோ, வெற்றி எனும் மலை உச்சி மீது ஏறி நின்றிடும் வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டு விட்டால், அத்தகு வாய்ப்பும் வசதியும் கிடைக்கப்பெற்றோருக்கு ஏற்படும் களிப்பு, அவர்களுடைய நிதான புத்தியை இழக்கச் செய்வதும், இன்னதுதான் செய்கிறோம் என்பது தெரியாமல் எதையும் செய்யத் தூண்டுவதும், எவரையும் மதிக்காமல், "எமக்கு ஈடு யாருண்டு" என்ற இறுமாந்த போக்கில் நடக்கச் செய்வதும் சகஜம். அதிலும், வெற்றி, அதிகமாகப் பாடுபடாமலோ, அல்லது எதிர்பாராத திடீர் அதிசயமாகவோ ஏற்பட்டு விடுமானால், அத்தகு நேரங்களில், வெற்றி புரியில் உலவுவோர், ஆணவ புரியினராகவே உருமாறி விடுவதுண்டு. வெற்றிக் களிப்பு, அவ்வளவு போதை செறிந்தோர் விசித்திரப் பொருள்!

மராட்டியர் குல மாணிக்கம்—மாபெருந் தலைவன் சிவாஜியை வர்ணாஸ்ரமம் எனும் மந்திரக்கோல் கொண்டு மதத் துறையில் தம் தாள் பணியச் செய்த ஆரியர், பிறகு, அந்த வெற்றிக் களிப்பால் ஏற்பட்ட போதை காரணமாக, அரசாங்கத் துறையிலுங்கூட தங்கள் ஆதிக்கக் கொடியை உயர்த்தி, அங்கேயுங்கூட, சிவாஜி, தங்கள் கட்டளைக்குக் கட்டுப்பட்ட கட்டழகனே என்று கூறிடத்தக்க நிலையை உண்டுபண்ண விழைந்தனர். விழையாமலா இருப்பர்! வெற்றிக் களிப்பு என்ன சாமான்யமான பொருளா! அந்த அரும் பொருள், தன்னை உண்டு களித்த 'உத்தமர்களை, தன் மனம் போன போக்கில் ஆட்டிப் படைக்காமலா இருக்கும்!

ஆரிய வட்டாரத்தவர், ஆட்சி வட்டாரம் முழுவதையும் தங்கள் ஏகபோக சொத்தாக ஆக்கிக் கொண்டு விட்டால், பிறகு, அரசன் சிவாஜியை, தங்கள் ஆணைவழி நடந்து தீரவேண்டிய நிலைமைக்கு ஆட்படுத்தி விடலாம் என்றெண்ணினர். அந்த எண்ணத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் "காயஸ்தர்கள்" என்ற பெயர் படைத்த மராட்டிய வகுப்பினர். காயஸ்தர்கள், படித்தவர்கள், புலமை மிகுந்தவர்கள்; ஆட்சி அனுபவம் தெரிந்தவர்கள்; வீரன் சிவாஜியால் மிகவும் விரும்பப் பட்டவர்கள். அந்தக் காலத்தில், மராட்டிய மண்டலத்தில், பிராமண குலத்தார்க்குப் போட்டியாக ஆட்சிப் பீடத்தில் வந்து நிற்கக் கூடிய தகுதியும் திறமையும் படைத்திருந்த பிராமணரல்லாத வகுப்பு அது ஒன்றுதான். எப்பாடு பட்டாவது காயஸ்தர்களை 'ஒழித்து'க் கட்டி விட்டால் அவர்களை ஆட்சி மண்டபத்தின் வாயிற்படிகளையும் அணுகவொட்டாதபடி செய்து விட்டால், அவர்களுக்கு மராட்டிய புரியில் பட்டமும் பதவியும் கிடையாது என்ற நிலையை உண்டு பண்ணிவிட்டால், பிறகு ஆரிய குலத்தவருடன் உத்தியோக மண்டலத்தில் போட்டிபோட யாருமே முன்வர மாட்டார்கள். ஆட்சி மன்றம், அந்த சாஸ்திரம் தாங்கிகளின் சொந்த சொத்தாகி விடும்; பட்டமும் பதவியும் அவர்களுடைய காலடியிலே தஞ்சம் என வந்து நின்று கொஞ்சு மொழி பேசும். என்வேதான், அந்தக் கனபாடிகளின் கூட்டம், ஆட்சி மண்டலத்தில் அரும்பணி பல ஆற் வந்த காயஸ்தர்கள் அனை ரையும் அங்கிருந்து துரத் பெருமுயற்சி செய்தது. காய தர்களின் தலைவன் பாலாஜி ஆவ் மீது இல்லாததும் பொல்லாதது கூறி, மன்னன் சிவாஜிக் அவன்மீது சீற்றம் ஏற்படுவதற் என்னென்ன சூழ்ச்சி முறை களைக் கையாளவேண்டுமோ அ வளவையும் கையாண்டுபார்த்த கோள்மூட்டுதல், குறை கூறுதல் இல்லாத குற்றங்களை ஏற்றி பேசுதல், செய்யாத தவறுகளை செய்ததாகப் புனைந்துரைத்தல் நடத்தாத அமுல் முறைகளை நட தியதாக ஏசுதல்—அவ்வளவையும் ஒன்றுவிடாமல் செய்து பார்த்த

ஆனால் மன்னன் சிவாஜி இ மதோன்மத்தர்களின் சூழ்ச்சி வ யில் சிக்க மறுத்துவிட்டான். இவர்களின் எண்ணம், ஏற்பா திட்டம், தீதான போக்கு, சூழ்ச்சி சூது வழிகள் யாவற்றையும் தெள்ளத் தெளிய உணர்ந்துகொ ண்டுவிட்டான். எனவே சிவாஜி காயஸ்தர்களின் தலைவன் பாலா ஆவ்ஜிக்கே மேலும் மேலும் ஆ க்கம் அளித்தான். பாலா ஆவ்ஜிமீது, ஆரியவட்டாரம் வீசி குற்றச் சாட்டுகள் அவ்வளவையும் துச்சம் என வெறுத்துத் தள் னான்.

**பீஷ்வா**
**மஜ்முவாதார்**
**வாக்கிய நவிஸ்**
**ஷ்ரு நவிஸ்**
**தாபீர்**
**சார்—இ—நாபாத்**
**சாதிர்**
**காஜி—உல்—குஜாத்**

இவை, சிவாஜியின் காலத்திலி ந்த எட்டு மந்திரிப் பதவிகள் இந்த எட்டிலே, சார்—இ—நாபா அல்லது சேனாதிபதி என்னும் பதவி ஒன்றைத் தவிர ஏனைய ஏழும் ஆரிய வட்டாரத்தவரிடமே இருந்தன. இவ்வளவு முக்கி

(11ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை:

குதிரையின் மீது அன்றிரவே குழந்தைகளோடு நானும் இரு வீரர்களும் பாண்டிய நாட்டை விட்டுப் புறப்பட்டோம்! எல்லையைத் தாண்டி ஓர் சிற்றூரை அடைந்தோம்! வீரரில் ஒருவன் பாண்டிய நாட்டைச் சேர்ந்த சிற்றூராக விருந்தாலும், அதில் தங்கி இருப்பது ஆபத்தென்றும், எதிரிகளின் ஆட்களால் எந்த விதத்திலும் இன்னல் ஏற்பட்டு விட இடமிருக்கிறதென்றும் கூறினன். பிறகு அந்த ஊருக்குச் சிறிது தூரத்திலிருந்த ஓர் காட்டில் வசித்துவரலாமென்றும்.

ஓராண்டு சென்றது! அரசரோடு இளவரசர் தொடுத்த போர் என்னவாயிற்று என்னவாயிற்று என்ற தகவல் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை! ஆகவே இரு வீரர்களையும் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி வைத்தேன், செய்தி அறிந்து வரும்படி!

ஒரு நாள் குழந்தைகளை குடிசையில் விட்டு விட்டு, கனிகள் பறித்து வர சிறிது தூரம் சென்றேன். யாரோ ஒரு பெண் தலைவிரிகோலமாகத் தொலை தூரத்தில் வருவது தெரிந்தது! காட்டில் தன்னந் தனியாக இளமங்கை! தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தாள்! அவள் யாரையோ தேடிக்கொண்டு வருவதைப் போலக் காணபட்டது! என்னைப் பார்த்தபடியே அல்லவா வருகிறுள்? ஆம், ஆம் என்னை நோக்கியே தான் வருகிறுள்! இப்படி சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவள் அருகே வந்து விட்டாள்!

அவளைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன! "என்ன ஆபத்து நேரிட்டு விட்டதோ? என்ன வென்ன கூறப்போகிருளோ?" என்றெண்ணியதும் என் நெஞ்சு திடுக்கிட்டது!

"வா! இசையொலி வா! துணையின்றியா வருகிருய்?" என்றேன் நான் கலங்கிய குரலில்.

"ஆம்!" என்றுள் தழு,தழுத்த குரலில். அவ்வளவுதான் நினைவு இழந்து கீழே மரம் போல் சாய்ந்து விட்டாள்!

பதினைன்காம் பகுதி

## காரிருள் கப்பியது !

வெட்டுண்ட மரம்போல், சுய நினைவு அற்று தரையில் வீழ்ந்து விட்ட இசையொலியின் முகத்தில், தண்ணீர் கொண்டு வந்து தெளித்தேன். சிறிது நேரத்தில் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். என்னைப் பார்த்ததும், அவளுக்குக் கண்ணீர்ப் பெருக்கெடுத்தோடியது!

ஏதோ பெரிய ஆபத்து—சொல்ல முடியாத துக்க சம்பவம்-நேர்ட்டு விட்டதென்பதை மட்டும் நான் புரிந்து கொண்டேன் ஆனல் யாருக்கு யாரால் எந்தவித ஆபத்து ஏற்பட்டது என்பதை என்னல் அறிந்து கொள்ள முடியவில்லை.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "எங்கே குழந்தைகள்?" என்று ஈனக் குரலில் கேட்டாள். "பத்திரமாகத்தான் இருக்கிறுர்கள்." என்று நான் கூறியதும், எழுந்து உட்கார்ந்தாள்.

"குடிசையில் குழந்தைகள் தனியாக இருக்கின்றன! நேரமாகிறது..........நாம் அங்குப் போகலாமா?" என்று நான் கூறியதும், மெதுவாக எழுந்தாள்.

வாடிவிட்ட கொடி காற்றில் ஊசலாடுவதைப் போல, நாதியற்றவளாக, நான் முன் செல்ல பின் வந்தாள்!

குடிசையை அடைந்தோம்! "இசையொலி, குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிரு! சிறிது நேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன்!" என்று கூறிவிட்டு, காய் கனிகள் பறித்து வர, எழுந்து வெளியே சென்றேன்.

நான் திரும்பி வரும்போது, சிரித்த முகத்தோடு அவள், குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருக்கக் கண்டேன்.

மனக் கவலையை மறக்கடிக்கும் கிடைத்தற்கரிய மருந்து அல்லவா, குழந்தைகளின் குழலினும் இனிய மழலை மொழிகள்! மனமகிழ்ச்சியை ஓர் அளவிற்கு மழலை மொழிகளினுல் அவள் பெற்றிருப்பதை அறிந்தேன்! என்னைக் கண்டால் திரும்பவும் அவள் கவலையில் ஆழ்ந்து விட்டால் என் செய்

(7-ம் பக்கம் பார்க்க)

# அபூர்வ சகோதரர்கள்!

## மு. கருணாநிதி.

வாளால் குத்தப்படுகிறான் விஜயன். காட்டிலே வாழும் விக்ரமனுக்கு வலி தாங்கவில்லை; துடிக்கிறான். மாளிகையிலே மழலைப் பருவத்திலே விஜயன் அழுதால் மரத்தடியிலே தவழ்ந்து விளையாடும் விக்ரமனும் அழுகிறான்.

'கண்ணே! மணியே! கற்பூரப் பெட்டகமே!' என்று காதலியைத் தழுவுகிறான் விஜயன். காதல் உணர்வெனும் வெறியேறி வேதனைப் படுகிறான் விக்ரமன். விஜயனின் உள்ளம் காதல் உதயத்தால் விரிகிறது. விக்ரமன் இதயமோ காதல் தீயால் கருகுகிறது. விஜயனுக்கு ஏற்படும் உணர்ச்சிகளுக்கு விக்ரமன் அடிமையாகிறான்.

ஏன்?...விஜயனும் விக்ரமனும் இரட்டைப் பிள்ளைகள்; ஒட்டிக் கொண்டு பிறந்தவர்கள். டாக்டரின் உதவியால் குழந்தைகள் தனித்தனியே பிரிக்கப்படுகிறார்கள். பிரிக்கப்படுவது மட்டுமல்ல—கதையில் வரும் ஒரு சம்பவத்தால் இரண்டு குழந்தைகளும் தனித்தனி இடத்தில் வளருகிறார்கள். விஜயன் அனுபவிக்கும் துன்பங்கள் எல்லாம் விக்ரமனுக்கும ஏற்படுகிறது. காரணம் ஒட்டிப் பிறந்து வெட்டிப் பிரிக்கப்பட்டவர்களாம். ஆனால் ஒரு வேடிக்கை; விக்ரமனுக்கு ஏற்படும் உணர்வுகள் விஜயனைத் தீண்டுவதில்லை. ஒருவன் அண்ணன் மற்றவன் தம்பியென்று கூட காரணம் கட்டிவிட முடியாது—ஏனெனில் இருவரும் சேர்ந்து—ஒட்டிக் கொண்டே பிறந்தவர்கள். விறு விறுப்பாக படத்தை எடுத்து விட்டால் இந்த முரண்பாடு மக்கள் எண்ணத்தில் அலை மோதிடாது என்ற துணிவோடு 'அபூர்வ சகோதரர்கள்' படம் வெளியிடப் பட்டிருக்கிறது. விக்ரமனுக்கு ஏற்படும் இடையூறுகள்—அவன் உடலுக்கு உண்டாகும் தீமைகள்—விஜயனுக்கும் பாதித்திருந்தால் விக்ரமன்—விஜயன் இவர்களிடையே தோன்றும் உணர்ச்சிகளுக்கு அர்த்தம் இருந்திருக்க முடியும். இதிலே கூட விஜயனின் துன்பங்கள் தான் விக்ரமனைத் துடிக்க விடுகின்றனவே தவிர—விஜயனின் இன்ப கேளிக்கைகள் விக்ரமனுக்கு தென்றலாயிருப்பதில்லை. அவனுக்குக் கஷ்டமென்றால் இவனுக்குக் கஷ்டம். அவனுக்குப் புன்னகைக் காரியின் முத்தமென்றால் இவனுக்கு அது, புயலின் கோரசப்தமாகிவிடும். **அவன் அழுதால் இவன் அழுகிறான். சிரித்தால் சிரிப்பதில்லை.** எவ்வளவு வித்யாசமான உணர்ச்சி! படம் பார்ப்பவர்கள் இதை சிந்திக்க நேரமிருப்பதில்லை; அவர்களைத்தான் அலங்காரமான செட்டுகளும்-ஆடம்பரமான உடைகளும்-மயக்கி விடுகின்றனவே. பாபம்; மதுமலர் வீழ் வண்டாகிறார்கள். இப்படி விஜயனுடைய உணர்ச்சிகளுக்கு அடிமையாக வாழவிரும்பவில்லை விக்ரமன். வேதனை தாள முடியாத நிலையில் ஓடுகிறான் டாக்டரிடம். வைத்தியரே! எம்மை வெட்டிப் பிரித்தவரே! விஜயனுக்கு தீமையென்றால் எனக்கு தீமை...... அவனுக்கு இன்பமென்றாலும் எனக்குத் துன்பம இந்த விபரீதத்தைத் தாங்கமுடியவில்லை. ஏதாவது மருந்து கொடுங்கள். இல்லையேல் என்னால் வாழமுடியாது என்று அலறுகிறான். வைத்தியருக்கோ வழிதெரியவில்லை. திகைக்கிறார். விக்ரமன் மாளாத துயரத்தால் மனமிடிந்து போகிறான். 'அடிமை! அடிமை!' என்று நினைவு மின்னல்கள் அவன் நெஞ்சில் பாய்ந்தோடுகின்றன. பச்சாதாபப்படுகிறார் டாக்டர். ஆனால் அவனுக்கு விடுதலைதர பாதை தெரியவில்லை.

விஜயன்—விக்ரமன் இந்த அபூர்வ சகோதரர்களின் **உணர்ச்சி விளக்கத்தில் ஏற்பட்டுள்ள தவறு—** நமது நாட்டு விளக்கத்துக்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகவுள்ளது. ஆம் அந்தத் தவறுதான் தற்போதைய நம் நிலை. சிந்தனைக்கு சிறிது வேலை — விஜயனும் விக்ரமனும் எந்த உருவத்தில் நிற்கிறார்கள் பாருங்கள்.

* 1949 ஆகஸ்ட் 18 லிருந்து இரு முறைகளாக இந்தியா உலக பாங்கியிலிருந்து வாங்கியுள்ள கடன் 440 லட்சம் டாலர்கள். இப்போது மீண்டும் 250 லட்சத்துக்குத் திட்டம் போட்டுள்ளது.

இந்தக் கடனை வாங்குவது மத்ய சர்க்கார். கடனை அடைக்கும் பொறுப்பு அனைத்திந்தியாவையும் சேர்ந்தது. விஜயனுக்குக் காயம் படுவதுபோல மத்யசர்க்கார் கடன் வாங்குகிறது. காயத்தால் ஏற்படும் சங்கடத்தை விக்ரமன் அனுபவிப்பதுபோல தென்னாடு கடன் அடைக்கும் பொறுப்பில் பங்குபெற வேண்டியிருக்கிறது.

* பதில் ஏற்பாடு எதுவுமின்றி இந்திய சர்க்கார், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதியாகும் பச்சைத் தோல் இறக்குமதி அளவைக் குறைத்தால் தென்னிந்தியாவில்பல தோற்பதனிடும் சாலைகள் மூட வேண்டி நேரிடும் என்று இந்திய தோல் வியாபாரி சம்மேளன காரியதரிசி A. பார்த்தசாரதி கூறுகிறார்.

பாகிஸ்தானுக்கும் மத்ய சர்க்காருக்கும் உறவு முறிகிறது என்றாலோ—மனஸ்தாபம் மலையெனக் கிளம்புகிறது என்றாலோ—வடநாட்டுத் தொழில் வளத்துக்கு ஏற்படுகிற இடர்ப்பாடுகளைக் காட்டிலும் அதிகத் தொல்லைகள் தென்னாட்டுக்குத்தான் முளைக்கின்றன. காரணம் விஜயன் ஸ்தானத்திலே வடவரும். விக்ரமன் ஸ்தானத்திலே தென்னாட்டவரும் என்பதைத்தவிர வேறு என்ன?......

அரசப் பிரதிநிதிகள், தூதுவர், ஹைகமிஷனர், டெபுடி ஹைகமிஷனர் என்பவர்களின் செலவுக்காக ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கம் செலவிடுவது 154 லட்சம் ரூபாய்கள்—24 இடங்களில் உள்ளவர்களுக்கு தலைக்கு 6½ லட்சம் சராசரி செலவு என்ற வகையில் வாஷிங்டன் பிரதிநிதிக்கு மட்டும் 23 லட்ச ரூபாய். லண்டன் பிரதிநிதிக்கு 45 லட்ச ரூபாய்.

* ஹைதராபாத் நிஜாமின் சொந்த செலவுக்கு வருஷத்துக்கு 102 லட்ச ரூபாய். அது தவிர நஷ்ட ஈடு 25 லட்ச ரூபாய். நிஜாமின் குமாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதுதவிர 20 லட்ச ரூபாய். நிஜாமுக்கு ஒரு நாளைய சம்பளம் 27,000 ரூபாய்.

* 1940-ல் 50 கோடியாயிருந்த ராணுவச் செலவு இப்போது 1[illegible] கோடியாகியுள்ளது.

கோடியும், லட்சமும் ச[illegible] சாதாரணமாகி விட்டது சர்[illegible]

க்கு! இந்த அநியாயச் செலவுகள் எல்லாம் யார் தலையில்! திராவிடத்தின் தலையிலுந்தான் விழும் இந்த பயங்கர பாரம்! திராவிடம் விக்ரமனாயிருக்கும் வரையில் தாங்கித்தானே தீரவேண்டும்.

அமெரிக்காவில்—முதலாளிகளோடு கைகுலுக்கும் நேரு! அந்தக் காட்சியைக் காணுகிற ரஷ்யா, "சீமான்களோடு சரசமா?" என்று சீறிடத்தான் போகிறது.

அந்த சீற்றம் ஏற்பட்டால் வடநாட்டை மட்டுமா பாதிக்கும்? நாம் தான் விக்ரமர்களாயிற்றே! வேதனை விட்டுவிடுமா நம்மை?

மத்ய சர்க்காரின் செலவுகளிலும், கடன்களிலும் பங்குபெறுகிற திராவிடம், வறுமையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வற்புறுத்தப்படுகிறதேயொழிய-இந்தச் செலவுகளால், கடன் வாங்கிடும் செயல்களால் வடநாட்டில் கொஞ்சிடும் வளமை, இங்கு கொஞ்சமாவது தலை நீட்டிட வழிதுறை கிடையாது. விஜயனின் இன்பவிருந்துகளில் விக்ரமன் கலந்து கொள்ளமுடியாதது போலத்தான் இதுவும்!

பயிர்த்தொழில் வளர்ச்சிக்கென்று வாங்கினார்களே கடன்—அதற்கு 375 கனத்த டிராக்டர்கள் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டு வடநாட்டில் தரிசாகக் கிடக்கும் 30 லட்சம் ஏகர் நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்யப்போகிறார்கள். அங்கு பஞ்சம் தீரும். வடநாட்டில் ஒரு லட்சம் ஏகர் காடுகளை அழித்து கழனிகளாக்குவர். அங்கு கவலை நீங்கும். இங்கு கண்ணீர் தேங்கும்.

பூனாவிலே புதிய போர்ப்பாசறைக்குக் கல்நாட்டுவிழா நடைபெற்றது அண்மையில். அங்கே அது! ஆனால் சென்னையிலே ஆவடிப் பாசறை அழிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உலகப் பாசறைகளில் ஒன்றான ஆவடியில் 50,000 பேர் இருந்ததை 5000 பேர்களாக ஆக்கியுள்ளனர். பலம் அங்கே வளர்கிறது. இங்கே தேய்கிறது. தேய்க்கப்படுகிறது! காதல் விஜயனுக்கு! கலக்கம் விக்ரமனுக்கு!

கடன் பளுவைத் தாங்குவதிலே, அதுவும் உணவுப் பொருள் அபிவிருத்தி உயர்வுக்காக உலக பாங்கியில் வாங்கிய கடன் பளுவைத் தாங்குவதிலே சென்னைக்குப் பங்குண்டு ஆனால் உணவு வளர்ச்சிக்காக ஆறுகோடி ரூபாய் கேட்டது சென்னை சர்க்கார். தர மறுத்துவிடடது மத்ய சர்க்கார். வடக்கேயுள்ள இரும்புப் பெட்டியில் முட்டிப்பார்த்து முக்காடு போட்டுக் கொண்டது சென்னை அரசாங்கம். ஏன்... அவர்கள் வாழ்ந்திடவும்—நாம் தங்கிடவும் வேண்டும்? விஜயன் உணர்ச்சிகட்கு விக்ரமன் ஆட்பட்டு அவதிப்பட்டானே—அந்த அவல நிலைதானே நமக்கும் ஏற்பட்டுள்ளது. இல்லை யென்கிறீர்களா?...

அகதிகள் அங்கு "படமுடியாதினித்துயரம்" என்று பாடினால் அவர்களுக்கு அருள் பாலித்து அவர்களில் ஆயிரக்கணக்கானவரை நம்நாட்டுக்கு அனுப்புகிறது வடநாடு- "பிச்சை யெடுத்ததாம் பெருமாள்—அதையும் பிடுங்கிற்றாம் அனுமார்" என்ற பழமொழிக்கொப்ப நாம் படுகிறபாட்டில் அகதிகளுக்கு வேறு அன்ன சத்திரம் கட்டவேண்டுமாம். ஆமாம்; துன்பத்தில் பங்குபெற வேண்டும். இன்பத்தில் பங்கு கேட்க நமக்கு என்ன யோக்யதை இருக்கிறது! நாம்தான் விக்ரமனாயிற்றே!

இன்னொருவன் உணர்ச்சிக்கு கட்டுப்பட்டு—சொந்த சிந்தனையற்றுப் பம்பரமெனச் சுழலும் விக்ரமன் டாக்டரிடம் ஓடி, இந்தக் கேடு போக்க மருந்து கொடுங்களய்யா என்று மன்றாடுகிறானே — அதைப் போலத்தான் திராவிடமும் திண்டாடுகிறது. இப்படி ஒரு பாரபட்சமான உணர்ச்சியைக் கதை எழுதியவர் சிருஷ்டிக்கலாமா என்று எப்படிப் படம் பார்ப்பவர் சிலர் சிந்திப்பது கிடையாதோ — அப்படித்தான் திராவிடத்தின் தேசிய நண்பர்கள் பலர், வட நாட்டுக்கும் திராவிடநாட்டுக்கும் இடையே எழுந்துள்ள பாரபட்சத் தன்மையை நினைத்துப் பார்ப்பதுங் கிடையாது. காரணம் என்ன? படம்பார்ப்பவர்—கண்கவர் காட்சிகள், அழகு மயிலனையாரின் ஆட்டபாட்டங்கள் இவைகளிலே ஆழ்ந்து கருத்தை மூடிக்கொள்கிறார்களல்லவா? அத்தன்மையில் தான் மந்திரி பதவிகள் — அமெரிக்க விஜயங்கள் — பத்திரிகைக்காரரின் விநோத விளம்பரங்கள், வீண் ஆடம்பரங்கள் இவைகளைக் கண்டு ஆனந்தத்தில் அமிழ்ந்து போய்விடுகிறார்கள் தேசியத் திருவுருவங்கள்.

ஒருவரிருவருக்கு விக்ரமனுக்கு கடைசியில் ஏற்பட்ட வேகம் ஏற்படுகிறது. "ஏன் நாம் இப்படி இருக்கவேண்டும்? இந்த அடிமைத்தளையை அறுக்க முடியாதா?" என்று ஆத்திரப்படுகிறார்கள் ஒருசிலர். விக்ரமன் டாக்டரிடம் சென்று மருந்து கேட்பது போல எங்கேயாவது நடக்கிற மாநாட்டிலோ — கூட்டத்திலோ— வரவேற்பிலோ வாய்திறந்து "இப்படியெல்லாம் வலுக்கட்டாயமாக மத்யசர்க்கார் செய்வது தென்னாட்டாரால் மறுக்கப்பட்டே தீரும்" என்று கனம் சஞ்சீவி ரெட்டியார் மாதிரி பேசிவிட்டு—விக்ரமனைக் காப்பாற்ற டாக்டர் மருந்து கிடையாது என்றதும், சோகத்தோடு திரும்புகிற அவன் பரிதாபநிலையைப் போல — மத்ய சர்க்கார் முறைத்துப் பார்த்ததும் அடங்கி ஒடுங்கி ஆத்திரம் தணிந்து பெட்டிப்பாம்பென இருந்துவிடுகிறார்கள் அந்தச் சிலரும்!

விஜயனின் உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்ட விக்ரமனுக்கு விடுதலைக்கு மருந்து கிடையாது. ஆனால் வடநாட்டு ஆதிக்கத்தால் வரண்டு கிடக்கும் திராவிடத்துக்கு இதோ இருக்கிறது மருந்து!...விடுதலைபெறும் மருந்து! ஆம்...'திராவிடநாடு திராவிடருக்கே' என்பது தான் அந்த நல்ல மருந்து, கவலை போக்கும் மருந்து.

---

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்கு, நாடகத்திலே சித்திரிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் கற்பனை சம்பவங்கள் அல்ல, வரலாற்று உண்மைகள் என்பதை நம்ப முடியவில்லை. எப்படி நம்ப முடியும் அவர்களால் பாவம், வரலாற்றைப் படித்துணர்வதற்கு அவர்கட்கு ஓய்விருந்தால்தானே! அவர்களிலே பெரியவர்கள், ஆளவந்தார்களாக இருக்கிறார்கள்-அவர்கட்கு அடக்குமுறைப் பாடம் படிப்பதற்கே நேரம் போதவில்லை! மற்றவர்களோ, அந்தப் 'பெரியவர்கள்' எய்யும் அடக்கு முறை அம்புகளைக் கண்டு சீற்றம் கொண்டெழும் பொது மக்களைச் சாந்தப் படுத்த வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்—அவர்கட்கிருக்கும் நேரமோ, அந்த வேலைக்கே சரியாக இருக்கிறது. இந்த நிலையிலே, அந்த இரு சாராரிலே, எந்த சாராருக்குத்தான் வரலாற்றுச் சுவடியைப் புரட்டிப் பார்க்கும் அளவுக்கு ஓய்வு கிடைக்க முடியும்! கிடைக்காதுதான், நிச்சயம் கிடைக்காதுதான்!!

# போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 27
12—11—49 சனிக்கிழமை


## கண் இரண்டும் குருடு! பெயரோ கண்ணாயிரம்!

கண்கள் இரண்டும் குருடாக இருக்கும். பெயர் என்னப்பா என்று கேட்டால் கண்ணாயிரம் என்று கூசாமல் கூறுவான்.

அழுக்கும் அந்த மங்கைக்கும் இடையே குறைந்தது ஆயிரம் மைல் தொலைவாவது இருக்கும். பெயர் என்ன என்று ஒரு சொல் கேட்டுப் பாருங்கள். சுந்தரவல்லி என்று சொகுசான விடை பிறக்கும்.

மேடைமீது ஏற்றி விட்டால் மூன்று மொழிகளை முணு முணுக்கவும் திறம் இருக்காது. பெயர் மட்டும் நாவுக்கு அரசு என்று இருக்கும்.

கையிலோ கால் காசு இருக்காது. வீட்டிலோ ஒரு வேளை உணவுக்கும் வழி இருக்காது. அணிந்திருக்கும் உடையிலோ பொத்தல் ஆயிரம் இருக்கும். ஆனால் பெயர்......தெரியாதா, பொன்னப்பன் என்று கூறுவான்! தங்கசாமி என்று சொல்வது முண்டு!

பார்க்கவே சகிக்காது. இருக்கவோ பிடிக்காது. இந்தக் கதியிலே இருக்கும் வீடு ஆனால் வாயிற்படியிலோ பெயர் செதுக்கப் பட்டிருக்கும் 'இன்ப மாளிகை' என்று!

திறந்து பார்த்தால் பக்கத்திற்குப் பக்கம் அபத்தக் களஞ்சியமாக இருக்கும். ஆனால் அட்டையைப் பாருங்கள். ஞானக் கடல் என்று புத்தகத்திற்குப் பெயர் போட்டிருக்கும்.

வாழ்க்கையிலே நாம் அடிக்கடி, சந்திக்க நேரிடும் விசித்திர சம்பவங்கள் இவை! பெயருக்கும் பெயரைத் தாங்கியிருக்கும் பொருளுக்குமிடையே உள்ள பொருத்தம் அமாவாசைக்கும் அப்துல்லா சாகிபுக்குமிடையே உள்ள அளவுக்குத்தான் இருக்கும் இத்தகு எடுத்துக் காட்டுகளில்! நினைத்துப் பார்த்தால் மிக மிக வேடிக்கையாக இருக்கும் இந்த உதாரணங்கள்!

நாட்டிலே நெடுநாட்களாக நடமாடிவரும் இத்தகு பொருத்தமற்ற பொய்ப் பெயர்களால் நமக்குக் கிடைத்துவரும் வேடிக்கை விருந்து போதாது என்ற காரணத்தாலோ, அல்லது இந்த விருந்து அனுபவித்து அனுபவித்துப் புளித்துப்போன விருந்தாக ஆகிவிட்டதால் நமக்குப் புத்தம் புதியதோர் விருந்தளிக்க வேண்டும் என்ற காரணத்தாலோ, சென்னை சர்க்கார், இந்தக் கிழமை, நமக்கு, இத் துறையில் புதியதோர் விருந்தளித்திருக்கிறார்கள்—விருந்து, மிக மிக வேடிக்கையானது!

சென்னை சர்க்கார் இந்த வாரம் பொதுஜன பாதுகாப்பு மசோதா என்பதாக ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த சட்டத்தின் பெயர் தான் பொதுஜன பாதுகாப்பு மசோதா! ஆனால் பொதுஜன உரிமைகளைப் பறிப்பதுதான இந்த சட்டத்தின் நோக்கம், நடைமுறை, திட்டம், விளைவு—எல்லாம்!

உரிமைகளைப் பறிக்கும் சட்டத்திற்குப் பெயர் பாதுகாப்புச் சட்டம்! ஆம், அப்படித்தான் கூறுகிறார்கள் சென்னை சர்க்கார்!

ஏன் அப்படிக் கூறுகிறார்கள் என்று கேட்கிறீர்களா, உண்மை நிலையையே பெயராகச் சூட்டிடாமல் ஏன் இப்படி உண்மைக்கு மாறான பெயரைச் சூட்டுகிறார்கள் என்று வினவுகிறீர்களா, எங்களை வினவி என்ன பலன்—நாங்கள் சர்க்காரைத் தாங்கிநிற்கும் கனம் அமைச்சர்கள் அல்லவே!

கண் இரண்டும் அற்றவர்களைக் கண்ணாயிரம் என்று கூறுகிறார்களே, அழகென்பதையே அறியாத மங்கையினை சுந்தரவல்லி என்று அழைக்கிறார்களே, வறுமையின் தோழனை பொன்னப்பன் என்று கூப்பிடுகிறார்களே, துன்பத்தின் இல்லத்தை இன்ப மாளிகை என்று அழைக்கிறார்களே, ஏன் அப்படி அழைக்கிறார்கள்? யாருக்குத் தெரியும? அவைபோன்றதோர் விசித்திரம்தான் இந்த சென்னை சர்க்கார் போக்கும். அவற்றிற்கெல்லாம் எப்படிக் காரணம் காட்ட முடியாதோ அப்படித்தான் இதற்கும் காரணம் கூறுதல் இயலாது!

ஆனால் ஒன்றுமட்டும் நமக்குத் தெரியும், நிச்சயமாகத் தெரியும் இந்த மசோதா அமுலுக்கு வந்ததும், மக்கள் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்படுவர்; காரணம் காட்டப்படாமல் காராக்கிரக வாசம் செய்க எனக் கட்டளையிடப்படுவர்; இத்தனை ஆண்டுகள் சிறைவாசம் செய்ய வேண்டும் என்பதுகூட குறிப்பிடப்படாமல் சிறைக்குள் தள்ளப்படுவர். இவ்வளவு விசித்திர தண்டனைகளும் குற்ற

புரிந்தவர்களுக்குத்தான் தரப்படும் என்று கூறிவிட முடியாது. நிரபராதிகளுக்கும் தரப்பட நேரும். அப்படித் தரப்பட்டாலும் இது நியாயமா என்று தட்டிக் கேட்கும் உரிமை யாருக்கும் கிடையாது. நீதி மன்றங்கட்குக்கூட கிடையாது. சுருக்கமாகச் சொல்வதானால், யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எத்தனை காலத்திற்கு வேண்டுமானாலும் காரணம் எதுவும் காட்டாமல் சிறையில் அடைத்து வைக்கும் உரிமை, இனி, சென்னை சர்க்காருக்கு உண்டு. இதுதான் பொதுஜனப் பாதுகாப்பு மசோதா.

கண் இரண்டும் குருடு! பெயரோ கண்ணாயிரம் என்று கூறுகிறீர்களா? ஆம்! உண்மை! முழு உண்மை!!

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வது? சோர்வுற்றிருக்கும் அவள் உடல் சோகத்தால் மேலும் தளர்ச்சி யடையும் அல்லவா? காடுமேடு சுற்றி அலைந்து திரிந்து வந்திருக்கிறாளே, சிறிது நேரம் தான் கஷ்டத்தை மறந்து களிப்போடு இருக்கட்டுமே என்றெண்ணி மறைவான ஓர் இடத்தில் உட்கார்ந்தேன்!

கைது செய்யப்பட்ட கண்மணி மலர்க்கோதையின் கதி என்னவாயிற்றோ? மன்னரோடு இளவரசர் தொடுத்த போரின் முடிவு என்ன? பாண்டிய நாடு மீண்டதா? அன்றி வீழ்ச்சி யுற்றதா? என்பவைகளைப் பற்றிய தகவல்களை அறிய என் உள்ளத்தில் ஆவல் நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டே சென்றது! பேசாமல், அந்தத் தகவல்களை அறிந்து கொள்ளாமல் இருக்க என்னால் முடியவில்லை. ஆகவே எழுந்து குடிசைக்குச் சென்றேன்!

அந்நேரத்தில் இசையொலியின் நிலையைக் கண்டதும் எனக்கு வேதனை அதிகமாயிற்று. சிறிது நேரத்திற்குமுன் குழந்தைகளோடு சிரித்து விளையாடிக்கொண்டிருந்த அவள் இப்பொழுது இரு குழந்தைகளை மடியில் உட்காரவைத்துக் கொண்டு, தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள்!

அருகே சென்றேன்! கொண்டுவந்திருந்த கனிகளைக் கீழே வைத்து, அவளைச் சாப்பிடும்படிக் கூறினேன். சாப்பிட்டானதும், "மலர்க்கோதை எப்படி இருக்கிறாள்?" என்று வினவினேன்! தேம்பிஅழுதாள், பதிலளிக்கவில்லை! என் நெஞ்சு பதைபதைத்தது! மலர்க்கோதைக்கு ஆபத்து வந்துவிட்டதாமே என்று என் மனம் அலறியது!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "போரின் முடிவு என்னவாயிற்று' என்று ஆர்வம் நிறைந்த குரலில் கேட்டேன். மௌனமாக இருந்தாள்!

"இசையொலி! இதென்ன இப்படி நடந்துகொள்கிறாய்! என் உள்ளம் எப்படி துடியாய்த் துடிக்கிறது, நீ பேசாமல் இருப்பது நல்லதா? என் வேதனை உனக்குத் தெரியவில்லையா? துக்கம்தான்! எவ்வளவு பெரிய துக்கமாகத்தான் இருந்தாலும் இனிநாம் என்ன செய்ய முடியும்?......நடந்தது நடந்துவிட்டது! அதனை எனக்குக் கூறேன், செய்தியையாகிலும் நான் தெரிந்துகொள்கிறேன்...இன்னுமா மௌனம்! இசையொலி, வாய்திறந்து பேசேன்!......போரின் முடிவு என்னவாயிற்று?"

"தோல்வியில் முடிந்தது..."

"தோல்விதானே! எதிர் பார்த்ததுதான்! பெருத்தபலம் —எண்ணற்ற வீரர்கள் — ஏராளமான இளஞ்சிங்கங்கள் இளவரசரின் தோளோடுதோள் நிற்க, அரசர் தோல்வி யடையாமல் வேறென்ன அடைவார்? தோல்வியுற்ற கோபத்தில் — ஆத்திரத்தில்—தன்வசம் சிறையிலிருந்த மலர்க்கோதையை ஏதாகிலும் செய்துவிட்டானா?..."

"இல்லை! இல்லை! நீங்கள் எண்ணுவதே தவறு!"

"ஆமாம், ஆமாம்! தவறுதான்! பெற்ற தந்தை என்னதான் கோபமாக விருந்தாலும் மகளையா துன்பப்படுத்துவார்......"

"நீங்கள் ஏதேதோ — கூறுகிறீர்கள்! தோல்வி அரசருக்கல்ல......"

"என்ன? என்ன? தோல்வி இளவரசருக்கா? இசையொலி, உனக்குப்......"

"பைத்தியமில்லை! யாரும் எதிர் பாராதது-சொன்னாலும் நம்பாதது—எவரும் நினைத்துக் கூடப் பார்க்காதது நடந்து விட்டது!"

"இசையொலி, நீ கூறுவது உண்மைதானா?"

"வேதனையில் எனக்கு விளையாட்டு வேறா? மக்கள் எதிர்ப்பையும் மகனின் கொதிப்பையும் அடக்கி, வேற்று இனத்தவருக்கு உயர்வும் வாழ்வும் அளிக்க, மன்னர், வீரத்தை மறந்து வெட்கத்தை விட்டு, மாற்றானின் தாள் பணிந்தார்.........."

"புரியவில்லையே எனக்கு!"

"பாண்டிய நாட்டின் எதிர்காலம் என்னவாகப் போகிறது என்பது புரியாமல்தான் அரசர் உதவிக்கு வரும்படி—ஆபத்தில் காப்பாற்றும்படி—சோழ மன்னனுக்கு ஓலை விடுத்தார்!"

"அடபாவி!"

"இப்படிதான் மக்கள் அலறினார்கள், சோழனின்படைபான்

(10-ம் பக்கம் பார்க்க)

# கொலைக் களம்

**[நா. அறிவழகன்.]**

ஞாயிற்றுக் கிழமை—

அன்று மாலை மங்கையர்க்கரசி தன் வீட்டில் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறையில், சன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பின்னல் வேலை செய்து கொண்டிருந்தாள்.

சன்னலில் இருந்து பார்த்தால் தெருவில் வருவார் போவார் அனைவரையுங் காணலாம்.

பதினாறு வயது நிரம்பி இருக்காது, மங்கையர்க்கரசிக்கு. ஆயினும் மணம் ஆகிவிட்டது.

ஐம்பது வயது நிரம்பிய ஆடவருக்கு மங்கையர்க்கரசி வாழ்க்கைப் பட்டாள். அவள் விரும்பி இராள், ஐம்பது வயது நிரம்பிய ஆடவருடன் வாழ. ஆனால் சமூகம் வாழ்க்கைப்படச் செய்துவிட்டது.

வாழ்க்கைப்பட்டு ஆறு, ஏழு திங்கள் ஆயின. அதுவரை அவள் 'இன்பம்' இன்னதுதான்—இப்படித்தான் இருந்திருக்கும் என்று அறிந்திருக்க மாட்டாள்.

'மணம்' என்றவுடன் 'கணவன் யார்?' என்று கேட்டிருப்பாள்.

பெற்றோர்கள், 'அடுத்த தெருவில் உள்ள கோடீஸ்வரர் மாணிக்கவாசகர்' என்று கூறியிருப்பார்.

'வயதென்ன இருக்கும்?' என்று அவள் கேட்காமல் இருந்திருக்க மாட்டாள்.

'இரட்டையில் இருபத்து ஐந்து இருக்கும்!' என்று அவர்கள், துணிந்து பதில் சொல்லா திருந்திருக்க மாட்டார்கள்.

'அவருக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன செய்வது?'—மங்கையர்க்கரசி கேட்காமல் இருந்திருக்க மாட்டாள்.

'நிறைய நிலபுலம், பணங்காசு, வீடுவாசல் எல்லாம் இருக்கிறது. வாழ்க்கைப் பட்டால் என்ன, நீ வாழ முடியாதா?' என்று கேள்வித் தோரணையிலே—பண வேட்கையிலே பெற்றோர்கள் சொல்லித்தானிருப்பார்கள், அழுத்தந் திருத்தமாக.

'அவையெல்லாம் இருந்தால் வாழ்க்கை செவ்வனே சென்றுவிடுமென்று நினைக்கிறீர்கள்?'—கேட்டிருப்பாள் அரசி.

'ஏனம்மா செல்லாது? முற்றிய மரத்தில்தான் முதிர்ந்த வயிரம் உண்டு. படித்திருப்பாயே, இல்லாவிட்டால் கேள்விப் பட்டாவது இருப்பாயே. அப்படி இருக்க ஏன் நீ வாழ்க்கையை இனிது நடத்த முடியாது?'—கூறியிருப்பர் பெற்றோர்கள்.

மறுக்க முடியாத நிலையில் மங்கையர்க்கரசி ஒத்துக் கொண்டிருப்பாள். மணம் முடிந்து விட்டது. ஆறு மாதங்களுக்கு மேல் ஆயின. இன்பங் கண்டாளில்லை. இந்நிலையில் உள்ள மங்கையர்க்கரசியின் உள்ளம் தெருவிலே செல்லும் இளம் உயிரை நாடாது என் செய்யும்?

முற்றுந் துறந்த முனி புங்கவராய் இருந்திருந்தால் ஐம்புலனையும் அடக்கி, ஒடுக்கி இருப்பார்கள். அவர்களிடம் அந்தப் பின்னல் வேலையைக் கொடுத்திருந்தால்கூட நாளொன்றுக்கு ஒரு பூ விழுக்காடாவது பின்னி முடித்திருப்பர்.

துறவிகள் ஏட்டில் — கவுந்தியடிகள் பரம்பரையில் இடம் பெறாதவள் மங்கையர்க்கரசி- எனவே, பலவற்றிலும் மனத்தைச் செலுத்திய அவள் நாளொன்றுக்கு ஒரு பூவிற்குக்கூட அடிப்போட்டிருக்க முடியாது. பல்லைக் கடித்துக் கொண்டு 'பின்னித் தொலைவோமே!' என்று கருதி அதிலே கருத்தைச் செலுத்தியிருந்தால் பாதிப் பூவையாவது முடித்திருப்பாள்.

ஆயினும் மனம் — பெண் மனம் அப்படிக் கட்டுப்படுத்தும் ஒரு பொருளல்லவே! மனமானது தங்கு தடையின்றி எங்குஞ் சென்று இன்பத்தை நாட வழிகோலுமேயன்றி, கட்டுப்பாடு — கடுஞ்சிறை இவற்றுள்ளே அடைபட்டுக்கிடவாதே!

தெருவில் வண்டி மாடுகளின் மணியோசை கேட்கும். எதில் மனதை ஈடுபடுத்தியிருந்தாலுங்கூட ஓசையைச் சற்று கூர்ந்து கேட்போமே என்றுதான் விரும்பிப் பார்க்கச் சொல்லும்.

வழக்கம்போல் தெருவில் மணியோசை கேட்டது. மங்கையர்க்கரசி திரும்பினாள்.

பெட்டி, படுக்கை முதலியவற்றுடன், தன் வீட்டின் முன் வந்து நின்ற வண்டியிலிருந்து இறங்கினார் ஒரு ஆடவர். பார்த்தாள். என்றும்; எங்கும் காணாத புது ஆளாகத் தென்பட்டார் வந்தவர். ஓடினாள் தாலி கட்டிய தந்தையிடம்.

கோடீஸ்வரர் மாணிக்கவாசகம் சுருட்டைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தார்.

'என்னங்க, உங்களைத்தானே!'

'உம்! என்னையா?... என்ன...?'

'யாரோ வருகிறார்கள். இதோ வெளியே வண்டியிலிருந்து இறங்குகிறார்கள்'

கோடீஸ்வரர் கட்டிலை விட்டு மெல்ல எழுந்து, தடி யூன்றி வாசலை நோக்கி நடந்தார்.

வண்டியிலிருந்து வந்தவர் பொருள்களை எல்லாம் உள்ளே அனுப்பிவிட்டு வீட்டிற்குள் சென்றார். எதிர்நோக்கி வருபவரைக் கண்டதும், 'அப்பா!' என்றார்.

உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு முறை கூர்ந்து கவனித்துவிட்டு, 'யார்? திருஞானமா? எப்போப்பா வந்தாய்? நலமா?' என்றார்.

'இப்போதான் வருகிறேன். நலந்தான்!. ஏன்? என்னைத் தெரியவில்லையா?'

'ஆமடா! ஆறு வருஷமாச்சு பாரு, கொஞ்சங்கூட அடையாளமே தெரியவில்லை. ரொம்ப இளைச்சுப்போயிட்டியே!'

'எனக்குக்கூட முதலில் உங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. பின்னால் உணர்ந்து கொண்டேன்'


## திராவிட முன்னேற்றக் கழகம்

ஆம்பூர்

## பொதுக்கூட்டம்

20—11—49 ஞாயிறு மாலை 6—மணிக்கு ஆம்பூர் வ. உ. சி. மைதானத்தில் நடைபெறும்.

பேச்சாளர்கள் :

**இரா. நெடுஞ்செழியன் M. A.**

**மா. இளஞ்செழியன் B. A. Hons.**

'புறப்பட்டு வருவதாக ஒரு கடிதம் போடப்படாதோ?'

'ரொம்ப அவசரமாகப் புறப்பட்டேன். அதனாலே கடிதம் எழுத இயலவில்லை,'

பேச்சுக்கள் முடிவடைந்தன.—

நீராடிவிட்டு உணவு உண்ணப் போனான், திருஞானம். ஆம்! மாணிக்கவாசகமும, திருஞானமும் ஒரே பந்தியில்தான் அமர்ந்திருந்தனர்!

மங்கையர்க்கரசியின் எண்ணத்தில் தந்தைக்கும், கணவருக்கும் உணவு படைப்பதாகவே பட்டிருக்கும். ஏன் நாமெல்லாங் கூடப் பார்த்திருந்தால் அப்படித்தானே எண்ணியிருப்போம்!

மங்கையர்க்கரசி உணவு படைக்கும் போதே திருஞானத்துடன் பேசிக்கொண்டாள். மஞ்சட் கயிற்றை மங்கையர்க்கரசியின் கழுத்தில் சுருக்கிட்ட மாணிக்க வாசகம் பக்கத்தில் இருக்கும்போதா அவள் அவனுடன் பேசினாள் என்று நினைப்பது தவறு! ஆம்! நன்றாகத்தான் பேசினாள்! அவ்வளவு நன்றாகக் கண்கள்தான் பேசிக் கொண்டன.

இரண்டு திங்கள் கடந்தன—

இருவரின் அன்பும் ஒன்றுகூடிக் கனிந்து விட்டன. பறித்து உண்ண வேண்டியதுதான் பாக்கி—தாமதம்!

இதற்கிடையில் இருவரும் சந்தித்தனர்.

'திருஞானம்!' என்றாள். அவளின் இதழுடைத்துப் புன்னகை மின்னி மறைந்தது.

அதிற் சொக்கிப்போன அவன், 'மங்கையர்க்கரசி!' என்றான், மலர் வாய்ச் சிரிப்பு அரும்பி மறைந்தது.

'இரவு கொல்லைப் புறத்தில் என்னைச் சந்தியுங்கள்' என்றாள். பேச்சில் குழைவு இருந்தது.'

'என்னேரத்திற்கு?! என்றான், மிக ஆவலோடு.

'பத்து மணி சுமாருக்கு!' என்றாள், பரிவுடன்.

தலையை ஆட்டிச் சென்றான். இசைந்தான் என்று எண்ணித் திரும்பினாள் ஏந்திழை. சென்ற திசை நோக்கி அவளின் பார்வை இருந்தது.

மூன்று நாட்கள் கொல்லைப்புறம் அவர்களுக்கு இன்ப புரியாக இருந்தது.

நான்காம் நாள்—

வழக்கம் போல் இருவருக்கும் உணவு படைத்து விட்டுத் தானும் உண்டு, உறங்குவதற்குப் படுக்கை விரித்துப் படுத்திருந்தாள், கோடீஸ்வரர்—ஆம்!—தாலி கட்டிய தந்தையின் பக்கத்திலே!

அவளின் உள்ளக் கிளர்ச்சி—இன்ப வேட்கை அடிக்கடி கொல்லைப் புறத்தை நாடியது. சென்றாள் திருஞானம் வரவில்லை. மீண்டாள். தடவை ஒன்று—இரண்டு—மூன்று ஆயிற்று. அவனில்லை அங்கே!

நான்காம் நாள் நான்கு முறை சென்றாள்.

கோடீஸ்வரர், 'அடிக்கடி சென்று வருகிறாளே, என்ன காரணம்?' என்று சங்கை கொண்டு கரவறிவான் வேண்டிப் பின் தொடர்ந்தார், கொலை வாளுங் கையுமாக.

காளையுங், கோதையும் முகத்தொடு முகம் ஒன்றி நின்றிருந்தனர்.

சாவறிவான் சென்ற மாணிக்க வாசகருக்கு 'இச்' சென்ற ஒலி கேட்டது. கிழட்டுப்பருவமல்லவா, கூர்ந்து பார்த்தார். யாரோ ஒரு காளையோடு, கோதை நல்லாள் கலந்து நின்றதைக் கண்டார்.

கோடீஸ்வரர் கொண்டு சென்ற கொலை வாள் அரவம் எனச் சீறிக் காளையின்மேல் வீழ்ந்து தாக்கிற்று.

உயிரற்று வீழ்ந்தான் காளை, ஆல் வேரொடு வீழ்ந்தாற்போலே!

உற்றுப் பார்த்தார், உயிரற்று வீழ்ந்த உருவத்தை!

தனது ஒரு மகன்—அதுவும் ஆறு ஆண்டிற்குப் பின் அண்மையில் பர்மாவினின்றும் தப்பிப் பிழைத்து வந்தவன் — திருஞானம் என்று அறிந்தார். நெஞ்சமுருகினார்.

உள்ளங் குழறியது. உடல் சோர்ந்தது. பார்வையை மங்கை —ஆம்!—தன் மனைவி மீது செலுத்தினார். உணர்ச்சி உதயமாயிற்று. மகனை மாய்த்த கொலைவாளை எடுத்து 'மாபாவம்' புரிந்த 'மாபாதகி' மீது வீச ஓங்கினார்.

காதலன் மாண்ட களத்தில் கண்ணீர்விட்டுக் கலங்கிக்கொண்டிருந்த கன்னி பார்த்தாள், வாளோச்சியதனை! பறித்தாள், தன் உயிரைக் குடிக்கவந்த கொலை வாளை! போக்கினாள், கொலைவாளுக்கு உரியவரின் உடலத்தில்! பாய்ந்ததுவாள்! பருகிற்றுக் குருதியை! மாய்ந்தார். மாணிக்கவாசகம்!

தரையிற் கிடந்த தன் ஆருயிர்க் காதலன் திருஞானத்தின் ஒரு முகத்தை நன்கு திருப்பிப் போட்டாள்! ஈந்தாள் இறுதியாக ஒரு முத்தம்!

'என்னால் நீ உயிரிழந்தாய்! உனக்காக வாழ்ந்த நான் இனி உயிருடன் இருந்தும் பயனில்லை. கொண்டவனையும் கொன்றாயிற்று!. நானிருந்தும் இனி என்ன பயன்?'—மலராத முகத்தில் முத்தமிட்டுக்கொண்டிருந்த மங்கையர்க்கரசியின் மலர்வாய் இவ்வண்ணம் பேசிற்று. கை, வாளை உருவித் தன் நெஞ்சில் செருகியது. உயிர் போயிற்று—உடல் கிடந்தது!

அவன் முகத்தில் அவள் முகம் இருந்தது. ஆனால், பொலிவில்லை, உணர்வில்லை.

கொல்லைப்புறமே இன்பபுரி! அதுவே பிறகு கொலைக்களம்! ஆம்! மாறி மாறி வரும் இரவு பகல் போலத் துன்பமும்!


## பெண்களைப் பற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| பெண்ணே பெரியவள் ஏன்? | 0 | 8 |
| புரட்சிப் பெண் | 0 | 8 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| பெண்கள் புரட்சி | 0 | 12 |
| காதல் புரிவது எப்படி | 0 | 6 |
| காதல் கடிதங்கள் | 0 | 3 |
| பெண்களிடம் ஏன் இந்த மோகம் | 0 | 8 |
| பெண்களை நம்பலாமா | 0 | 4 |
| பெண்களும் வசியமும் | 0 | 3 |
| பெண்களுக்குச் சம உரிமை | 0 | 12 |
| பெண்களும் சமூகமும் | 0 | 12 |
| பெண்கள் உலகம் | 0 | 12 |
| விராயி (கவிதை) | 1 | 4 |
| வீடும் விளக்கும் | 1 | 0 |
| தமிழன் காதல் | 0 | 4 |

★

| | | |
|---|---|---|
| அவள் வாழ்வு (ஆசைத்தம்பி) | 0 | 8 |
| கடவுளால் ஆகாதது (டி. கே. சீனிவாசன்) | 0 | 8 |

(தபாற் செலவு தனி)

பகுத்தறிவுப் பாசறை,
பவழக்காரத்தெரு, சென்னை 1.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய நாட்டில் திடீரென்று புகுந்ததும்! பாண்டியனைப் பணிய வைக்க வேண்டுமென்று பல நாள் எண்ணிக் கொண்டிருந்தவன். அந்தச் சோழன்! தக்க சமயம் வந்தது! தாள் பணிவதாகத் தானே வலிய அழைப்பு தேடி வந்தது! சொல்ல வேண்டுமா? வஞ்சகன் இரவில் யாரும் எதிர்பாராக்காத முறையில் நாட்டில் புகுந்தான்! தூங்கிக்கொண்டிருந்த இளவரசரின் சேனை தயாராவதற்கு முன்னரே தாக்கினான்! இரவுநேரம்! திடீர் தாக்குதல்! படை சிதறுண்டது! இளவரசர் வாளெடுத்துப் போரிட்டார்! கயவனொருவன் பின்பக்கமாக இருட்டில் மறைந்து வந்து உடைவாளை வீசி யெறிந்தான்...."

"இசையொலி, அது இளவரசர் மீதுபட்டு விட்டதா?"

"ஆம் பட்டது! கீழே சாய்ந்தார்!...இந்த உலகையே..."

"ஐயோ! கேட்க முடியவில்லையே! என் இதயம் பிளந்து விடும் போல் இருக்கிறதே! இளவரசர் இறந்தாரா? அறிவின் செல்வம், ஆற்றலின் உருவம் மறைந்ததா? பாண்டியநாடு பெறுவதற்கரிய தன் புதல்வனை—வீரனை-இழந்ததா?..."

"இசைவாணரே! அழுது இனி என்ன பயன்?"

"இனி உயிர் வாழ்வதில் மட்டும் என்ன பயன்?"

"என்ன பயனா? இதோ, இதோ இருக்கும் இந்தக் குழந்தைகளுக்காக — பரம்பரையின் கடைசி செல்வங்களுக்காக— நாம் உயிர் வாழ வேண்டும்!"

"கடைசி செல்வங்களா?"

"ஆம்!"

"மற்றவர்கள் என்ன வானார்கள்?"

"கபடனான சோழன், அரசரையும் கைது செய்து கொன்று விட்டான்!!"

"அரசரும் இறந்துவிட்டாரா? இடிமேல் இடி விழுகிறதே! இவ்வளவுமா நடந்துவிட்டது? மலர்க்கோதையும் அவள் அண்ணியும், அரசியாரும் அந்த மோசக்காரனின் கையிலா சிக்கிவிட்டார்கள்.... இசையொலி, ஏன் திரும்பவும் கற்சிலை ஆகிவிட்டாய்!....என் உயிர் பதைபதைக்கிறது உடனே சொல், அவர்களின் கதி என்னவாயிற்று......பேசமாட்டாயா? எனக்குப் பைத்தியம் பிடிக்காது, இசையொலி, பைத்தியம் பிடிக்காது, சொல்!......"

இசையொலி தேம்பித்தேம்பி அழுதாள்! அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, நடந்ததைக் கூறும்படி அவசரப் படுத்தினேன்!

"கைது செய்யும்படிதான் உத்தரவிட்டான்!"

"பார்த்தாயா, பார்த்தாயா! நான் எண்ணியது சரியாகிவிட்டது!"

"ஆனால் கைது செய்யமுடியவில்லை!"

"ஏன், தப்பிவிட்டார்களா?"

"ஆம்! தப்பிவிட்டார்கள்! கயவனின் கையில் சிக்கக்கூடாதென்று மூவரும் இந்த உலகிலிருந்தே தப்பிவிட்டார்கள்!"

"என்ன? தற்கொலையா செய்துகொண்டார்கள்?"

"ஆம்! தற்கொலைதான்!"

இசையொலி இன்னும் என்னவென்ன கூறினாளோ, பிறகு என் காதில் ஒன்றுமே விழவில்லை!

எங்கும் காரிருள் கப்பிக்கொண்டது! பூமி அதிர்ந்தது! மரம் செடிகள் தலைகீழாக ஆடின! வானம் இடிந்தது! என் தலை சுற்றியது! காற்றில் பறந்தேன்! சுயநினைவு இழந்தேன்! தரையில்சாய்ந்தேன்!

(தொடரும்)

## அட்டைப் படம்

பொதுஜன பாதுகாப்பு மசோதா என்ற பெயரில் மக்கள் உரிமைகளைப் பறிக்கும் சட்டம் ஒன்றை சட்ட சபையில் விவாதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் சென்னை காங்கிரஸ் சர்க்கார். இந்த உரிமைப் பறிப்புச் சட்டம் என்றென்றைக்கும் அமுலில் இருக்க வேண்டும் என்கிறது சர்க்கார். இந்தக் கொடுமை இரண்டாண்டுகட்கு மேல் இருக்கக் கூடாது என்கின்றனர் காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள். காங்கிரஸ் சர்க்காருக்கும் காங்கிரஸ் எம்.எல். ஏக்களுக்கும் இடையே இருக்கும் கருத்து வேறுபாடெல்லாம் கொடுமை, என்றென்றைக்கும் இருக்க வேண்டுமா' அல்லது சில ஆண்டுகளுக்கு மட்டுமா என்பதில்தானே தவிர கொடுமையே கூடாது என்பதில் அல்ல. இந்த விசித்திர நிலைமையைத் தான் இந்த வாரப் 'போர்வாள்' இதழின் முதல் பக்கத்தில் எழில் படச் சித்தரித்துள்ளார் நம் ஓவியர் சாமி.


## ஏஜண்டுகள் தேவை.

குடந்தை கும்பகோணம்.
டால்மியாபுரம்.
ராசிபுரம்.
போளூர்.
லால்குடி,
திருவாரூர்.
திண்டிவனம்.
ராஜபாளையம்.
கடலூர் O.T.
சிக்கல்.
ஆலந்தூர்-சென்னை.
சோழவந்தான்.
மாயவரம்.
முசிறி.
நாமக்கல்.
தேனி.
போடிநாயக்கனூர்.
திருச்சி.

ஆகிய ஊர்களில் போர்வாள் விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

மானேஜர்
போர்வாள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மான பதவிகளிலும் பொறுப்புகளிலும் அவர்கள் இருந்தும்கூட, அவர்களுடைய எண்ணம் ஈடேற முடியவில்லை — காயஸ்தர்கள்மீது சிவாஜிக்கு வெறுப்போ எரிச்சலோ உண்டுபண்ண அவர்களால் இயலவில்லை.

தாங்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும், காயஸ்தர்கள்மீது கொண்டுள்ள பாசத்தை, பற்றை, சிவாஜி. துளியளவும் துண்டித்துக் கொள்ளாததைக் கண்டு சீற்றம் கொண்டனர் ஆரியர் என்றாலும், அதை வெளியே காட்டிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், காயஸ்தர்கள்மீது தங்கட்குள்ள பகைமையை வெளிப்படையாக உணர்த்திவிட்டால், சிவாஜியின் சீற்றம் தங்கள்மீதே பாயத்தொடங்கிவிட்டால் என் செய்வது என்ற அச்சம் அவர்களுக்கு! எனவே, அவர்கள், தங்கள் சூழ்ச்சி பலிக்காதது கண்டு, பிறகு, பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டனர். ஆனால் சிலசில சமயங்களில் கூடைகளின் மூடியைத் திறந்துகொண்டு உள்ளிருக்கும் அரவங்கள் தலை தூக்கிப் பார்ப்பதுபோல, அவ்வப்போது, ஆரியபுரியினர், நாலாறுபேர் சந்திக்க நேர்ந்திடும் சமயங்களிலெல்லாம், ஆயிரம் படித்தவர்களாக இருந்தும் என்ன, காயஸ்தர்கள் வெறும் சூத்திரர்கள்தானே என்று உரத்த குரலில் கேலி செய்தபடி இருந்தனர். வெறும் கேலிதான் செய்ய முடிந்தது அவர்களால்! வேறென்ன செய்யமுடியும் வேந்தனின் கோபம் தங்கள்மீது பாய்ந்தால் என் செய்வது என்ற அச்சம் அவர்களுடைய உள்ளத்தில் உலவிடும்போது!

வீரன் சிவாஜி உயிருடன் இருந்தவரை, வேதியர் வட்டாரம், மராட்டிய மண்டலத்து ஆட்சிப் பீடத்தையே தம் வீட்டுத் தாழ்வாரத்திற்கு அழைத்துவந்துவிடுவது என்ற திட்டத்தில் வெற்றி பெற முடியவில்லை.

1680ல் சிவாஜி மறைந்தான். அவன் மகன் சாம்பாஜி பட்டத்திற்கு வந்தான். 1680 முதல் 1689 வரையுள்ள ஒன்பது ஆண்டுகள், சாம்பாஜி, சத்ரபதியாக வாழ்ந்தான். இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில், ஆரியம், சிவாஜியின் காலத்தில், எதைச்சாதிக்க முயன்று தோற்று விட்டதோ, அதைச் சாதித்துக்காட்டிவிட்டது. ஆட்சிப் பீடத்தை தங்கள் இனத்தவரின் ஏகபோகப் பொருளாக 'ஸ்வீகாரம்' செய்து கொண்டுவிட்டது.

சாம்பாஜியை வீழ்த்துவது மிக எளிது என்பதை, ஆரியம், அவன் பட்டத்திற்கு வந்த வெகு சில நாட்களுக்குள்ளாகவே உணர்ந்து கொண்டுவிட்டது. மது, மங்கை, இந்த இரண்டினிடமும் சாம்பாஜிக்கு இருந்த பாசம், மராட்டிய மண்டலத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மீது அவனுக்கிருந்த பாசத்தை விடப் பல நூறு மடங்கு அதிகமானது. எந்தெந்த மங்கையருடன் கொஞ்சிக் குலவினால் என்னென்ன வித இன்பம் கிடைக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதிலேயே அவனுடைய நேரம் முழுவதும் செலவாகிவிட்டது. எனவே ஆட்சிப்பீடத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட அவனுக்கு நேரம் சிறிதும் கிடைக்கவில்லை. மானென மருளும் கண்கள், மதனன் வில் என வளையும் புருவம், கண்ணாடியைப் பழிக்கும் கன்னம், இன்பப் பெட்டகம் எனத்தகும் அதரம் ஆகிய இவற்றின் தராதரங்களைப் பற்றியேதான் அவனுக்கு நினைப்பு. நேற்றைக்கு சரோஜா, இன்றைக்கு கமலம், நாளைக்கு சகுந்தலா, சாரதாதேவி அதற்கு அடுத்த நாள், தாரா மற்றொரு நாள், தேவிகா இடையே ஒரு நாள் என்ற விதத்திலே அழகுத் தெய்வங்கள் ஒவ்வொன்றிற்கும் நாள் குறித்துக் கொடுப்பதிலேதான் அவனுக்கு இன்பம். புதிய புதிய மலர்களிலே புகுந்து இன்பத் தேனை மொண்டு உண்டு களிக்கும் வண்டாக இருந்தான் அவன். எனவே அவனுக்கு நாடு—நாட்டில் வாழும் மக்கள்—அந்த மக்களை ஆளும் ஆட்சி—அந்த ஆட்சிப் பீடத்தில் அமரும் பிரதானிகள்—அந்தப் பிரதானிகள் பிறந்த குலம் ஆகிய இவற்றைப்பற்றியெல்லாம் சிந்தனை எழவே மார்க்கமில்லை. சாம்பாஜியின் தன்மை இதுவாக இருக்கும்போது, ஆரியம், இவனுடைய ஆட்சிக் காலத்தில், ஆட்சி மண்டலத்தையே தனதாக ஆக்கிக்கொண்டதில் வியப்பேது!

**கவி கலாஷா**, சாம்பாஜியின் பிரதம அமைச்சர்; ஆரிய குலத் தோன்றல்; வேத சாஸ்திரங்களில் விற்பன்னர்; சகல கலா சாஸ்திரி; இவர் அறியாத மந்திரங்களும் தந்திரங்களும் கிடையாதாம் — கவி பாடுவதில், இவருக்கு ஈடு இணை கூற முடியாதாம். அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி, அனுபவம் ஆகிய திறமைகள் யாவும் கைவரப் பெற்றவராம் இவர்! இவ்வளவு சிறப்பும் சீலமும் வாய்ந்த இவர், அடிக்கடி மன்னனைத் தனியாகச் சந்தித்து, "மன்னா! நீயோ பாராளும் வேந்தன். உன்னை மன்னன் என்றழைத்து மகிழ்ச்சியும் பெருமிதமும் அடையும் மக்களோ ஆயிரமாயிரம். மராட்டிய மண்டலத்தின் புகழோ உன்னால்தான் நிலை நாட்டப்படவேண்டும். தீரன் சிவாஜியின் புத்திரன் சிவாஜியையும் மிஞ்சிய மாவீரனாகத் திகழ்ந்தான் என்ற பொன்மொழியோ வரலாற்றில் ஏறவேண்டும். உன்னுடைய வீரத்தால், தீரத்தால், ஆற்றலால், அறிவுரையால், மராட்டிய மக்கள் வாழ்க்கையிலே இன்பம் எக்களிக்கவேண்டும். உன்னைத்தான், உன் வீரமிகு செயல்களைத்தான், உன்னால் பெறவிருக்கும் வாழ்வைத்தான், நீ தேடித் தரக்கூடிய புகழைத்தான் நாடே எதிர்பார்த்து நிற்கிறது. இந்நிலையில், மன்னா, நீ இப்படி மதுவும் மங்கையுமே கதி என்றிருக்கிறாயே, தகுமா?" என்று அறிவுரை கூறி, அரசனை நல்வழிப் படுத்தியிருப்பார் என்றுதானே எதிர் பார்க்கிறீர்கள்? தான் கற்ற சாஸ்திரங்களையெல்லாம் சத்ரபதிமுன் விரித்துக்காட்டி, மன்னனின் தவறு எவ்வளவு பெரிது என்பதை அவனுக்குக் கசடற உணர்த்தியிருப்பார் என்றுதானே எண்ணுகிறீர்கள்? மன்னன் தகா வழிச் செல்பவனாக இருந்தாலும், மந்திரி, சகலகலா பண்டிதராக இருப்பதால், மன்னனின் தவறுகளை மட்டுப்படுத்தி நாட்டை நலம்பெறச் செய்திருப்பார் என்றுதானே கருதுகிறீர்கள்? நீங்கள் மட்டுமா, யாருமே அப்படித்தான் கருதுவர். உண்மையிலேயே ஒரு நல்லமைச்சர் நடந்துகொண்டிருக்கவேண்டிய வழியும் முறையும் அதுதான். ஆனால் கலை பல கற்ற **கவி கலாஷா** என்ன செய்தார் தெரியுமோ? "போர்வாள்" ஏடு கூறினால் நீங்கள் நம்பமாட்டீர்கள், சீச்சீ—இப்படியெல்லாம் இருக்காது — இதெல்லாம் இந்தப் பத்திரிகாசிரியர்களின்

சொந்தக் கற்பனை என்று கேலி பேசுவீர்கள், எனவே **ஆர். சத்தியநாத அய்யர் எம். ஏ. எல். டி.** என்ற சரித்திர ஆசிரியரையே பேச வைக்கிறோம், கேளுங்கள்:

"கவி கலாஷா, மராட்டிய சாம்ராஜ்யத்தின் நன்மைகளை முற்றிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, மிகுந்த அழகும் காம வேட்கையை எழுப்பும் திறமும் படைத்த மங்கையரை, முடிவு என்பதே இல்லாமல், வரிசை வரிசையாக, மன்னனிடம் அனுப்பியபடி இருந்தான்."

மதியூக மந்திரி மன்னன் சாம்பாஜிக்குச் செய்த திருப்பணி இது! மன்னனுக்கு ஏற்ற அமைச்சர்! அமைச்சருக்கேற்ற மன்னன்!!

மன்னனின் மதியை இவ்வண்ணம் மழுங்கச் செய்ததோடு நின்றாரா கவி கலாஷா, இல்லை இல்லை, மக்களுக்கும் மன்னனுக்குமிடையே பெரும் பேதத்தையும் உண்டு பண்ணினாராம், மராட்டிய சாம்ராஜ்யத்திற்கே பேராபத்தைத் தேடித் தந்தாராம், கூறுகிறார் ஆசிரியர், சத்தியநாதய்யர்!

மன்னனும் மந்திரியும் இந்த நிலையில் இருக்கும்போது, ஆரியம் இது தான் தக்க சமயமென்று மடமடவென்று ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றலாயிற்று. மன்னன் சாம்பாஜியின் காலத்தில் மராட்டிய மண்டலத்தில், ஆரியம் இட்டது தான் சட்டம், வைத்தது தான் கட்டளை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

சாம்பாஜிக்குப் பிறகு அவன் மகன் **சாகு** பட்டத்திற்கு வந்தான். சாகு மன்னனாக இருந்தபோது, பாலாஜி விஸ்வநாத், பாஜி ராவ், பாலாஜி பாஜிராவ் ஆகிய மூன்று வேதியர்கள், ஒருவர்பின் ஒருவராக முதலமைச்சர் அல்லது பீஷ்வா பதவியை வகிக்கலாயினர். மன்னன் **சாகு**வின் காலத்தில் ஆரியர் ஆதிக்கம் பரிபூரணமானதாகி விட்டது. பெயரளவுக்குத்தான், சாகு, மன்னனாக இருந்தானே தவிர், ஆட்சிக் கயிறு, பீஷ்வாக்களாக இருந்த பிரம்ம குல தலைவர்களிடம்தான் இருந்தது. பீஷ்வாக்களின் விருப்பத்திற்கு மாறாக, சாகு, ஏதும் செய்ய முடியாத நிலையும், சகல அதிகாரங்களும் பீஷ்வாக்களின் கரங்களிலேயே சூழியும் நிலையும் ஏற்பட்டுவிட்டது. சாகு, மரணம் அடையும் தறுவாயில், அவனுக்கு மகன் யாரும் இல்லாத காரணத்தால், அப்போது பீஷ்வவாக இருந்த **பாலாஜி பாஜிராவ்** என்ற வேதியரே, தனக்குப் பின்னால் தன் சாம்ராஜ்யத்தை ஆண்டு வரவேண்டுமென்றும், அந்த வேதியருக்குப் பின்னால் அவருடைய சந்ததியினரிடமே ஆட்சி செல்லவேண்டுமென்றும், தெளிவாகக் குறிப்பிட்டு இரண்டு கடிதங்களை எழுதி வைத்துவிட்டு மாண்டு போனான், மன்னன் சாகுவிற்குப் பிறகு, சிவாஜி கண்ட மராட்டிய சாம்ராஜ்யம் பீஷ்வாக்கள் என்னும் பிரம்ம குலத்தவரின் குடும்பச் சொத்தாகவே ஆகிவிட்டது.

சிவாஜி மறைந்த ஆண்டு 1680. பீஷ்வா பாஜிராவ் கரத்திற்கு, ஆட்சி, மாறிய நாள், 1749. இவ்வண்ணம், கிட்டத்தட்ட எழுபதே ஆண்டுக் காலத்தில், சிவாஜி, அரும்பாடுபட்டு நிறுவிய மராட்டிய சாம்ராஜ்யம் ஆரியம் என்ற பலிபீடத்திற்கு இரையாக்கப்பட்டு விட்டது.

சிவாஜி மதத் துறையிலே மட்டும் ஆரியத்திற்கு அடிபணியநேரிட்டது. ஆனால் அவனது சந்ததியினரோ ஆட்சித் துறையிலேயே ஆரியத்திற்கு அடிபணியும் நிலைக்கு ஆளாகி விட்டனர்.

ஆம்! மராட்டியர் வரலாறு ஒரு சோக சித்திரம். ஆரியம் என்ற பயங்கர பலி பீடத்தின் முன்னால் ஒரு பெரிய சாம்ராஜ்யமே பலியாக்கப் பட்டதை எடுத்துக் காட்டும் உயிரோவியம். அந்த வரலாற்று ஓவியத்தைத்தான் அழகிய முறையில் ஒரு நாடக ஓவியமாகத் தீட்டியிருக்கிறார் அண்ணா அவர்கள். அந்த நாடகத்தைப் பார்க்கும் போதுதான், தேசீயத் தோழர்

(5-ம் பக்கம் பார்க்க)


## அறிஞர் அண்ணாவின் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| ஆரிய மாயை | 1 | 0 | 0 |
| குமரிக் கோட்டம் | 1 | 0 | 0 |
| பணத் தோட்டம் | 1 | 0 | 0 |
| சிறு கதைகள் | 1 | 0 | 0 |
| கற்பனைச் சித்திரம் | 1 | 0 | 0 |
| உலகப் பெரியார் | 1 | 0 | 0 |
| அறப்போர் | 1 | 0 | 0 |
| ஜமீன்—இனாம் ஒழிப்பு | 1 | 0 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 1 | 0 | 0 |
| நிலையும் நினைப்பும் | 0 | 12 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| ஏ, தாழ்ந்த தமிழகமே! | 0 | 8 | 0 |
| மே தினம் | 0 | 5 | 0 |
| மொழிப் போராட்டம் (இரா. நெடுஞ்செழியன்) | 1 | 0 | 0 |

புதிய மூவர்ண அட்டைப்படத்துடன் கூடிய புதிய பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| தீ பரவட்டும் | 1 | 0 | 0 |
| 1858—1948 | 1 | 0 | 0 |

### திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar a Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)